1981 ஏப்ரல் 10]

திரு. எல். இளையபெருமாள்: கல்வி அமைச்சர் சொல்கிற போது தொழில் ஆசிரியர்கள் பள்ளிகளிலே வேலைசெய்கிறவர்கள் சில பேர்கள் வேலையை விட்டுவிட்டார்கள், காரணம் போதிய மாணவர்கள் இல்லை என்பது. அந்த ஒரே காரணத்தினால் வேலையை விட்டுவிட்ட ஆசிரியர்களைப்பற்றி பரிசீலனை செய்து அவர்களுக்கு வேறு இடத்தில் வேலை கொடுக்க முயற்சி செய்வார்களா? அது சம்பந்தமாக ஆசிரியர்கள் சங்கத்திடமிருந்து தகவல் வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. அப்படி வேலையை யாராவது இழந்திருப்பார்களேயானால் தனிப்பட்டு கோரிக்கைகளை விண்ணப்பங்களை எழுதித் தந்தால் அதுகுறித்து பரிசீலித்துத் தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

பூம்புகார் பகுதியில் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் ஆய்வு

*வினா எண்–729 திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் பகுதியில் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் அண்மையில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மத்திய தொல் பொருள்ஆய்வுத்துறை 1962–63ஆம் ஆண்டிலிருந்து அகழ்வாராய்ச்சி நடத்தியுள்ளது. கடைசியாக1978ல் இத்தகைய ஆய்வு நடத்தப்பட்டது. ஆனால் அண்மையில் எதுவும் நடத்தவில்லை.

(ஆ) அகழ்வாராய்ச்சியின் மூலம் புத்தவிகாரம், யூரலி படகுத்துறை, ரோமானிய பானை, ஏடுகள், பல வண்ண மணைகள், செங்கல் மேடை போன்ற பல தொல்பொருள்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் பூம்புகார் அல்லாமல் வேறு எங்கேயாவது ஆய்வு செய்யப்பட்டதா? அவைகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பணிகள் என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பூம்புகார் பற்றி மட்டும் கேட்டிருப்பதால் அந்த விவரம் மட்டும் இருக்கிறது. அண்மையிலே கங்கைகொண்ட சோழபுரத்திலும், மதுரை மாவட்டத்தில் கோவலது பொட்டலிலும் அகழ்வாராய்ச்சிப் பணி நடந்திருக்கிறது. இப்படிச் சிலயிடங்களிலே ஆய்வுகளை தொல்பொருள் ஆய்வுத் துறை மேற்கொண்டிருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பூம்புகார் பகுதியில் நடத்தப்பெற்ற அகழ்வாராய்ச்சிப் பணிகளில் பழங்காலப் பொருட்கள் கிடைத்ததாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்தத் தொல்பொருள்கள் தமிழர்களின் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், வாழ்க்கையையும் தெரிவிக்கும் முறையில் அமைந்திருக்கிறதா? மேலும் அகழ்வாரய்ச்சி நடத்துவதற்கு மத்திய அரசை மாநில அரசு கோருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கே அகழ்வாராய்ச்சியிலிருந்து கிடைக்கப்பெற்ற பொருள்கள் நம்முடைய பழம் பெருமையையும், பழம் பெரும் வரலாற்றையும் தெளிவாக்கக் கூடிய அளவில்தான் இருக்கின்றன. அவைகளெல்லாம் காப்பாற்றப்பட வேண்டியவை தான். இதுகுறித்து மேற்கொண்டு விரிவாக ஆராய்ச்சியை நடத்த வேண்டுமென்ற விருப்பம் தமிழக அரசுக்கு இருக்கிறது. ஆகவே, கடலின் கீழே பூம்புகார் பகுதியிலே எதேனும் இருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையில் கோவாவில் இருக்கின்ற National Institute of Oceanography என்ற நிறுவனத்தோடு நாம் தொடர்பு கொண்டு இது குறித்து என்ன செய்யலாம் என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்தபொழுது, அவர்கள் பயணப்படிக்கும், தங்குகின்ற செலவுக்குமான பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொண்டால் ஆராய்வதாகத் தெரிவித்தனர். அதற்காக 35,000 ரூபாய் ஒதுக்குவதென முடிவு செய்திருக்கிறோம். ஆகவே அவர்கள் விரைவிலே வந்து கடலின் கீழே என்ன இருக்கிறது என்பதைப்பற்றி ஆராய்கின்ற காரியத்தைச் செய்வார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆராய்ச்சியில் பண்டைத் தமிழர்களின் பெருமையை விளக்கும் வகையில் பல வண்ண மணிகள், படகுத் துறை, செங்கல் மேடை, ரோமானியப் பானைப் போன்று ரோமானியர்கள் பயன்படுத்திய பொருட்கள் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவைகள் எந்த நூற்றாண்டைச் சேர்ந்த பொருட்கள் என்பதை அகழ்வாராய்ச்சித் துறை அறிவித்திருக்கிறதா? இந்த ரோமானியப் பொருட்கள் சம்பந்தமாக

1981 ஏப்ரல் 10]

அந்த நாட்டோடு தொடர்பு கொண்டு அதைப்பற்றி விவரம் ஏதேனும் கிடைத்திருக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நகரம் முற்காலச் சோழர் காலம் முதல் பிற்காலச் சோழர் காலம் வரை தொடர்பு கொண்டதாக இருக்கிறது என்பதை அங்கே கிடைத்திருக்கின்ற பொருட்களை வைத்துக் கொண்டும், இதுவரைக்கும் தெரிந்த ஆதாரங்களை வைத்துக்கொண்டும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். மத்திய காலத்தில் இந்நகரம் கடலால் அழிக்கப்பட்டிருக்கலாம் என்ற ஒரு கருத்து இந்த ஆராய்ச்சியினரிடத்தில் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலேதான் நாம் கடல் அகழ்வாராய்ச்சி செய்யலாம் என்ற ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம்.

மேல்நிலைக்கல்வி (+2) தேர்வு

*வினா எண் 730. திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பள்ளியில் சேராமல் தனியாக படித்து மேல்நிலை கல்வி தேர்வு (+2) எழுத அரசு அனுமதித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம். 10ம் வகுப்பு அல்லது 11-ம் வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 35 சதவீதம் மதிப்பெண்கள் பெற்று வெற்றிபெற்ற 18 வயது கடந்தவர்கள் யாவரையும், செய்முறை தேவையில்லாத கலைப் பாடங்களில் பள்ளியில் படிக்காமல், நேரடியாகக் கல்வித் தேர்வு எழுத அரசு அனுமதித்துள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு எஸ். எஸ். எல். சி-யிலே ஏற்கனவே குறிப்பிட்ட வயதுக்கு மேல் இருந்தால், பள்ளிகளிலே படித்து இடைக்காலத்திலே விட்டிருந்தாலும் விசேஷ அனுமதி பெற்றுப் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுகிறதே, இதைப்போன்று பிளஸ்2 தேர்வையும், பள்ளியிலே படிப்பை இடையிலே விட்டு விட்டிருந்தாலும் பரீட்சைக்குப் பணம் கட்டி பரீட்சை எழுதிப் பூர்த்தி செய்ய அனுமதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பத்தாம் வகுப்பில் அல்லது 11ஆம் வகுப்பில் தேறியிருக்க வேண்டும்; 18 வயது முடிந்திருக்க வேண்டும். அவர்கள் பரிசோதனை தேவைப்படாத கலைப் பாடங்களை எடுத்துக் கொண்டு, நேரடியாக எழுதி பாஸ் செய்யலாம்.